# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU

| SESSIONS CASE No. | 134 | of | 2018 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 2 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | தட்சிணாமூர்த்தி | வயது | | இனம் | |
| தகப்பனார் /கணவர் பெயர் | | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 16th day of October 2025

நாள் :- 16.10.2025 அ.சா. 2 (எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

எனக்கு வயது 81 ஆகும். நான் தாம்பரம் நகராட்சியில் Sanitary Inspector ஆக வேலை பார்த்து 2002 ம் ஆண்டு செட்படம்பரில் ஓய்வு பெற்றேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் நகராட்சி ஆணையராக இருந்தார். நான் பணியில் இருக்கும் போது ஆஜர்எதிரி தான் ஆணையர் பொறுப்பில் இருந்தார். 14.11.2002 ல் எனக்கு விடுப்பு சம்பளம் கேட்பதற்காக காலை 9 மணிக்கு நகராட்சி அலுவலகத்திற்கு சென்றேன். நான் ஆணையர் அறைக்கு சென்றேன். ஆனால் அப்போது ஆணையர் அறையில் இல்லை. வெளியே சென்றிருக்கிறார் என்று சொன்னார்கள். அதன் பிறகு நான் அங்கே காத்திருந்தேன். பின்னிட்டு ஆணையர் வந்தார். அவருக்கு பின்னால் SI இளங்கோவன் வந்தார். ஆணையர் திட்டிக்கொண்டே நடந்து வந்தார். இந்த பற

பசங்களுக்கு பதவி கொடுத்தது தப்பு என்று திட்டியபடி வந்தார். அதன் பிறகு ஆணையர் அறைக்கு உள்ளே சென்றுவிட்டார். பின்னாடியே வந்த இளங்கோவனும் அறைக்குள் சென்றார். இந்த சம்பவத்தின் போது ஆணையர், இளங்கோவன் மற்றும் நான் மட்டுமே அங்கு இருந்தோம். ஆனால் நான் அறைக்குள் செல்லவில்லை.

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் தாம்பரம் நகராட்சி அலுவலகத்தில் 5 வருடகாலம் வேலை பார்த்தேன். தாம்பரம் நகராட்சி அலுவலகம் தாம்பரத்தில் முத்துரங்கம் முதலி தெருவில் உள்ளது. நகராட்சி அ லுவலகத்திற்கு காம்பவுன்ட் சுவர் உள்ளது. காம்பவுன்ட் சுவற்றை தாண்டி சுமார் 20 மீட்டர் வந்த பிறகு தான் அலுவலக கட்டிடத்தை அடைய முடியும். முன்பகுதியில் போர்டிகோ உள்ளது. போர்டிகோவை கடந்து உள்ளே சென்றால் அலுவலகத்தின் பல பிரிவுகள் உள்ளன. நகராட்சி அலுவலகத்தில் சுமார் 300 பேர் வேலை செய்வார்கள். அலுவலகத்தில் மட்டுமே சுமார் 60 பேர் வேலை செய்வார்கள். இளங்கோவன் பிறப்பு இறப்பு பிரிவை கவனித்துக்கொண்டிருந்தார். ஏற்கனவே அவர் சரிவர வேலை செய்யவில்லை என்று அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. ஆஜர் எதிரி strict Officer என்றால் சரிதான். பணியிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்கள் தொகை கோரி அணுகக்கூடிய அலுவலகம் இயக்குநர் அலுவலகம் என்றால் சரிதான். இது சம்பந்தமாக ஆலந்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கு.வி.மு.ச. பிரிவு 164 வாக்குமூலம் பெறப்பட்டது.

மேலும் தனிப்பிராது சம்பந்தமாக தாம்பரம் நீதித்துறை நடுவா் நீதிமன்றத்தில் பிரிவு 200 கீழ் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அவ்விரு இடங்களிலும் கொடுத்த வாக்குமூலத்தில் நான் எதிரி ஜாதி பெயா் சொல்லி திட்டியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆலந்தூா் குற்றவியல் நீதித்துறை நடுவா் நீதிமன்றத்தில் ஜாதி பெயா் சொல்லி திட்டியதாக சொல்லியிருக்கிறேன். CMP.No.4065/2003 மனுவில் 23.04.2003 ம் தேதி தாம்பரம் குற்றவியல் நடுவா் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை வழக்கு சம்பந்தமாக போலீசா் யாரும் என்னை விசாரணை செய்யவில்லை. போலீசா் என்னை விசாரணை செய்தாா்கள் என்றும், போலீசா் விசாரணையில் எதிரி புகாா்தாரரை சாதி பெயரை சொல்லி திட்டியதாக எதுவும் சொல்லவில்லை என்றும் தற்போது வாதிக்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் நகராட்சி அலுவலகம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :-**

இல்லை

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu